செ.வெ.எண்: 53/ஜூன் நாள்: 21.06.2018

## பத்திரிக்கை செய்தி

ஒமன் நாட்டிலுள்ள ஓர் முன்னணி நிறுவனத்திற்கு 22 முதல் 27 வயதிற்குள் பவுண்ட்ரி துறையில் டிப்ளமோ பவுண்டரி டெக்/மெக்கானிக்கல் தேர்ச்சியுடன் இரண்டு வருடத்திற்கு மேல் மவுல்டிங் துறையில் பவுண்ட்ரி இயந்திரத்தில் பணி அனுபவம் பெற்ற மவுல்டிங் ஸிப்ட் பொறியாளர்கள் (Moulding Shift Engineers) மற்றும் கோர் (core) துறையில் பவுண்ட்ரி இயந்திரத்தில் பணி அனுபவம் பெற்ற கோர் ஸாப் பொறியாளர்கள் (Core Shop Engineers)மற்றும் டிப்ளமோ தொழில்நுட்ப பிரிவு/ மெக்கானிக்கல் அல்லது அறிவியல்/வர்த்தகம் பட்டப்படிப்புடன் பவ்ணட்ரி துறையில் பணி அனுபவம் பெற்ற இளநிலை கொள்முதல் அதிகாரிகள் (Jr.Purchase Officers) தேவைப்படுகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு ரூ.80,000/- மாத ஊதியத்துடன், இலவச இருப்பிடம், விமான பயணச்சீட்டு, உடல் நல காப்பீடு, 30 நாட்கள் வருடாந்திர விடுப்பு மற்றும் ஓமன் நாட்டின் சட்ட திட்டத்திற்குட்டபட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

தகுதியுடையவர்களின் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி,அனுபவம் பாஸ்போர்ட், ஆகியவற்றின் நகல்கள் மற்றும் வெள்ளை நிறப் பின்னணியுடன் கூடிய ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை omceq80@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு omcmanpower.com என்ற வலைதளத்திலும் 044-22505886/22502267/22500417/8220634389 ஆகிய தொலைபேசி எண்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**